# WORD OF CHRIST

# (கிறிஸ்துவின் வசனம்)

கொலோ 3:16

ஆசிரியர் | II கொரி 3:6 | மே
சகோ. அர்ச்சுனன் | | 1993


வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும்
உண்டாவதாக!

இந்த பக்காவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில்
மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஓர் உண்மையான புதிய ஏற்பாட்டு
கிறிஸ்தவத்தை அறிவிப்பதே எமது பணியாகும். ஆண்டவராகிய
இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் தொடர்வதே எமது
அனுதின ஜீவியமாகும். சென்ற இதழின் வேத அறிவுப்போட்டி
யில் கலந்து கொண்ட அநேகர் தேர்ச்சி பெற்று உள்ளார்கள்
என்பதை மிக்க சந்தோசத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
விடைகளை நீங்களே கண்டுபிடியுங்கள். மற்றவர்களிடம் கேட்
காதீர்கள். இது வேத அறிவைப் பெருக்கிக் கொள்ள உதவி
யாயிருக்கும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனை
வரோடுங்கூட இருப்பதாக! ஆமென்!

ஆசிரியர்

## FELLOWSHIP WITH WHOM
## (யாரோடு ஐக்கியம்)

இப்பூமியில் நீங்கள் யாரோடு ஐக்கியம் கொண்டுள்ளீர்கள்?
ஆதி கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்
அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும். ஜெபம் பண்ணு
தலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று அப் 2:42 ல் வாசிக்
கின்றோம். உங்களுடைய ஐக்கியம் இப்படிப்பட்ட விஷயத்தில்
இருக்கின்றதா! அல்லது மாய்மாலம் பண்ணுகிற மக்களோடும்,
பரியாசக்காரரோடும், நேரத்தை வீண் அடித்துக்கொண்டு ஊர்
ஊராக சுற்றும் உதவாக்கட்டைகளோடு இருக்கிறதா! பிரிய
நண்பரே நம்முடைய இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு

உங்களை அழைக்க தேவன் உண்மையுள்ளவர் I கொரி 1:9 நமது ஐக்கியம் இயேசுவோடு இருக்க வேண்டும். அதை விடுத்து மனித தலைகளை தெரிந்து கொண்டு நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும். நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச்சொல்லு-கிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவை-யிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? I கொரி 1;12-13 ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று இருக்கின்றோம். நமக்காக சிலுவையிலறையப்பட்டவரும் நம்மை தமது சபையில் சேர்ப்பவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே . அப்படியிருக்கும் போது நாம் ஏன் இன்னும் மனித தலைகளை பிடித்துக் கொண்டு பின் தொடரவேண்டும்.

அஞ்ஞானிகளோடும் அவிசுவாசிகளோடும் விக்கிரகாரா-தனைக்காரரோடும், பொய்யரோடும், விபசாரக்காரரோடும் நமக்கு என்ன ஐக்கியம். வேதம் என்ன சொல்லுகிறது. அஞ்ஞானிகள் பலியிடு-பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடு-கிறார்களென்று சொல்லுகிறேன் நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயி ருக்க எனக்கு மனதில்லை, I கொரி 10:20 இப்படிப்பட்ட பேய் களோடே நமக்குஎதற்கு ஐக்கியம்? நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம்கிறிஸ்துவனுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா நாம்பிட்கிற அப்பம் கிருஸ்துவனுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிற படியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். I கொரி 10; 16-17.

அவிசுவாசிகளுடன் சம்பந்தங்கலவாதிருங்கள் அவர்-களுக்கும் நமக்கும் வெகுதூரம். நாம் ஜீவனுள்ள தேவனை தொழுது கொள்கின்றோம் அவர்கள் நம்முடைய ஜீவனுள்ள தேவனைதொழுது கொள்ளாமல் நமது தேவனால் படைக்கப்பட்ட பொருள்களை வழி பட்டுக்கொண்டும் சிலர் தேவன் இல்லை என்று சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களோடு நமக்கு

ஐக்கியம் எதற்கு? அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது !! கொரி 6;14-16ல் வாசிக்கின்றோம். ஆகையால் பிரியமானவர்களே! அப்போஸ்தலராகிய யோவான் சொன்னது போல நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம் எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரராகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்கள் சந்தோசம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம். தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம் அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!

ஆமென்!

## ☀ பரிசு

ஏப்ரல் மாத இகழின் வேத அறிவுப்போட்டில் பரிசு பெறுபவர்கள்

| | | | |
|---|---|---|---|
| தயாளன் | வத்தலக்குண்டு | 8 பழனிச்சாமி | முடிகானம் |
| 2 N.D. தமிழ்வாணன் | மேல்விசாரம் | 9. அனிதா | சொக்கலிங்கபுரம் |
| 3 கஸ்பல் | வத்தலக்குண்டு | 10. ஸ்டெல்லா | வத்தலக்குண்டு |
| 4. பவுல் | ,, | 11. ரூத் | ,, |
| 5 ரவிச்சந்திரன் | கூடலூர் | 12 கலைவாணி | ,, |
| 6. செல்வராஜ் | அத்திப்பாளையம் | 13 எஸ்தர் மகிமாஜெயந்தி | ,, |
| 7. R. ரவிச்சந்திரன் | முடிகானம் | 14 கிறிஸ்டினாதனசீலி | பெருமாள்பட்டி |
| | | 15. Mrs செங்கோல் | பாண்டிச்சேரி |

## ஏப்ரல் மாத இதழின் விடைகள்

1. தாவீது சங் 42;3
2 புதைத்துவைத்தான் மத் 25;18
3. 11 நாளா 30;6
4. கேள்வியினாலே ரோமர் 10;17
5. எழுபது பேர் ஆதி 46;27
6. ஜீவனை விட்டார்கள்
7. கர்த்தர்
8. தீமோத்தேயு
9. கூடாது
10. கர்த்தர் உன்னைக்கடித்து கொள்வாராக

## இம்மாத வேத அறிவுப்போட்டி

1. எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை எது?
2. போர்ச் சேவகர்கள் இயேசுவின் வஸ்திரங்களை எத்தனை பங்காக பங்கிட்டார்கள்?
3. கர்த்தருக்கு தன்ஒரே மகளை சர்வாங்க தகனபலியாக கொடுத்த நியாயாதிபதி ~~இராஜா~~ யார்?
5. ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டு தப்பினவன் யார்?
5. எவைகளை சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்க வேண்டும்?
6. உபாகமம் புத்தகத்தை எழுதியவர் யார்?
7. விருத்த சேதனம் செய்ய வேண்டுமா?
8. முட்டையிட்டு அவயங்காத்தும் குஞ்சுபொரிக்காமற் போகிற பறவை எது?
9. தேவதூதர்கள் இயேசுவுக்கு எப்போது ஊழியம் செய்தார்கள்?
10. இயேசு செய்த அனைத்து காரியங்களும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டு உள்ளதா?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்டர் கார்டில் எழுதி இம் மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான எழுதுபவர்களுக்கு பரிசு அனுப்பப்படும்.

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU-624202. Anna Dt.**

---

**For Private Circulation only.**

---

Published by Batlagundu Church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu-624202.